# மோசடிகளிலிருந்து தவிர்ந்திருங்கள் மாதத்தை தொடங்கிவைத்தல்

ஆளுநர் முனைவர் நந்தலால் வீரசிங்க

2026 யூன் 02 அன்று இலங்கை மத்திய வங்கியின் கேட்போர்கூடத்தில் ஆற்றிய உரை

மதிப்பிற்குரிய அதிதிகளே, ஊடகவியலாளர்களே, சீமாட்டிகளே, கனவான்களே

## அறிமுகம்

நாடு முழுவதுமுள்ள மக்களின் நிதியியல் நல்வாழ்வினை பாதுகாப்பதற்கென அர்ப்பணிக்கப்பட்ட **"மோசடிகளிலிருந்து தவிர்ந்திருங்கள்"** என்ற கருப்பொருளைக் கொண்ட ஒரு மாதகால தேசிய பிரசாரத்தை இலங்கை மத்திய வங்கி தொடங்கிவைப்பதனால் நிதியியல் மோசடிகளுக்கெதிரான பொதுமக்கள் விழிப்புணர்வு மற்றும் தாக்குப்பிடிக்கும்தன்மை என்பவற்றை வலுப்படுத்துவதற்கான எமது கூட்டான முயற்சிகளில் முக்கிய மைல்கல்லொன்றினை இன்றைய நாள் அடையாளப்படுத்துகின்றது.

## இலங்கையில் நிதியியல் மோசடிகளின் தற்போதய நிலை

சீமாட்டிகளே, கனவான்களே, நிதியியல் பணிகளுக்கான அதிவிசேட காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். டிஜிட்டல் வங்கித்தொழிலானது ஒட்டுமொத்த வங்கியின் சக்தியையும் ஒவ்வொரு பிரசையினதும் உள்ளங்கையில் இடம்பெறச்செய்துள்ளது. நிதியியல் சேவைகள் உள்ளடங்கலாக பரந்தளவான பொருட்கள் மற்றும் சேவைகள் உலகை சமூக ஊடகங்கள் எமது விரல் நுனிக்கு கொண்டுசேர்த்துள்ளன.

இருந்தும், இலங்கையில் காணப்படும் நிதியியல் மோசடியானது டிஜிட்டல் வங்கித்தொழில் அல்லது அதிகரித்த இணையவசதி மற்றும் செல்லிடத்தொலைபேசி ஊடுருவல் ஆகியவற்றுக்கு அப்பாற்பட்ட காரணிகளாலும் நெறிப்படுத்தப்படுகின்றன. நம்பகமான நிதித் தகவல்கள் சீரற்ற முறையில் சென்றடைதல், நுகர்வோர் விழிப்புணர்வு முயற்சிகள் நகர்ப்புறங்களைத் தாண்டிச் சென்றடைவதில் உள்ள மட்டுப்பாடுகள் மற்றும் மிக எளிமையாகச் சொல்லப்போனால், இலங்கையர்களில் பெருமளவிலானோர் எது சட்டபூர்வமானது, எது ஒழுங்குமுறைப்படுத்தலுக்கு உட்பட்டது, எது முற்றிலும் மோசடியானது என்பது பற்றி இன்னும் அறியாமல் இருக்கிறார்கள் என்ற நடைமுறை ரீதியாக யதார்த்தம் போன்ற ஆழமான, தொடர்ச்சியான சவால்களின் விளைவாகவே இன்றைய நிதி மோசடிகள் உருவெடுத்துள்ளன.

இங்கு தொழில்நுட்பத்தின் பிரசன்னம் மற்றும் தகவல் இல்லாமை ஆகிய இரண்டுமே ஒரே நேரத்தில் சுரண்டப்படுகின்றன. இதன் காரணமாகவே, நாம் ஒரே நேரத்தில் இருவேறு தீவிர நிலைகளைக் காண்கிறோம்: ஒருபுறம் உரிமம்பெற்ற நிதி நிறுவனங்களுக்கும் சட்டவிரோதத் திட்டங்களுக்கும் இடையே உள்ள வேறுபாட்டைக் கண்டறியத் தெரியாத மக்கள், மறுபுறம் மோசடி இணைப்புகளைக் கிளிக் செய்து, தங்களது ஒரு தடவைக் கடவுச்சொற்களை பகிர்ந்துகொள்ளும் இணைய அறிவுள்ள நகர்ப்புற மக்கள்.

சீமாட்டிகளே, கனவான்களே, இன்று எமக்கு முன்னுள்ள சவால் இரு மடங்காகும் அதாவது அதிகரித்தளவில் நவீனத்துவம் மற்றும் படிப்படியாக வளர்ச்சியடைகின்ற டிஜிட்டல் மோசடிகளிலிருந்து பிரசைகளைப் பாதுகாத்தல் அதே சந்தர்ப்பத்தில் சட்டத்திற்குப் புறம்பான திட்டங்களை, குறிப்பாக, சட்டத்திற்குப் புறம்பான பெருந்தோட்டத் திட்டங்கள் நாடு முழுவதும் செழித்தோங்குவதற்கு காரணமாக அமைந்துள்ள விழிப்புணர்வு இடைவெளியைக் குறைத்தல் என்பனவாகும்.

## நிதியியல் மோசடிகளின் உலகளாவிய பரிமாணங்களும் முறைமைசார் உள்ளார்ந்தங்களும்

இப்பிரச்சனை இலங்கைக்கு தனித்துவமானதொன்றல்ல, உலகம் முழுவதும் ஒழுங்குமுறைப்படுத்துநர்களும் கொள்கை வகுப்பாளர்களும் இதனையொத்த சவால்களுடன் போராடுகின்றனர். உலக வங்கி மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டுச் சபை என்பற்றின் பணி உள்ளடங்கலாக உலகளாவிய சான்றானது நிதியியல் மோசடி மற்றும் வாடிக்கையாளர் துஷ்பிரயோகம் என்பன குடும்பச் செல்வங்களை இல்லாதொழிப்பது மாத்திரமன்றி நிதியியல் முறைமையில் நம்பிக்கையினை நலிவடையச்செய்து, பரந்த பொருளாதார மீட்சியையும் தாக்குப்பிடிக்கும் தன்மையையும் பலவீனமடையச்செய்கின்றது என்பதனை எடுத்துக்காட்டுகின்றது.

குறிப்பாக அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் இதன் பாதிப்பு சமச்சீரற்றதாக உள்ளது. இதனைத்தாங்கும் இயலளவு குறைந்தவர்களுக்கும் மிகக்குறைந்த வளங்களைக் கொண்டவர்கள் மீதும் இது விகிதாசாரமற்ற சுமையினை ஏற்படுத்துகின்றது. பிரமிட் திட்டங்கள், ஏமாற்றுகின்ற உயர்-ஆதாய முதலீட்டுத் திட்டங்கள், சட்டத்திற்குப் புறம்பான வைப்பு ஏற்கும் தொழிற்பாடுகள், அதிநவீன டிஜிட்டல் மோசடிகள் போன்றன வெறுமனே தனிப்பட்ட நிதியியல் இழப்புக்களை மாத்திரம் ஏற்படுத்தாது அவை ஒட்டுமொத்த சமூகங்களினதும் திரட்டப்பட்ட சேமிப்புக்களை அழிவுறச்செய்து, வறுமை ஒழிப்பு முயற்சிகளை பல ஆண்டுகள் பின்நோக்கி தள்ளச்செய்கின்றன. மிகவும் பேரண்டப் பொருளாதார நோக்கிலிருந்து பார்க்கையில் இத்திட்டங்களும் தொழிற்பாடுகளும் நாம் பாடுபட்டுக் கட்டியெழுப்பிய முறையான நிதியியல் நிறுவனங்கள் மீதுள்ள நம்பிக்கையினை முற்றிலும் சீர்குலையச்செய்கின்றன.

நிச்சயமின்மை அவ்வப்போது நிதியியல் மோசடிக்கான ஆக்கபூர்வமான தளத்தை உருவாக்குகின்றது என்பது பற்றியும் நாம் அவதானமாகவிருக்கின்றோம். மக்கள் நம்பிக்கை இழக்கின்ற போது, அவர்களுக்குள்ள பாதுகாப்புக்கள் பலமிழக்கின்ற போது, அவர்களுக்கு நிதியியல் நிவாரணம் அவசரமாகத் தேவைப்படுகின்ற போது, போன்ற சந்தர்ப்பங்கள் தான் மோசடிக்காரர்கள் காத்திருக்கும் வாய்ப்புக்களாகும். இவ்வாறான சம்பவங்களை நாம் கடந்த காலத்திலும் அவதானித்துள்ளதுடன் அவற்றை தற்போது முறியடிக்கவேண்டும்.

நிச்சயமாக இதே காரணத்திற்காகத்தான் நவீன நிதியியல் வசதிக்குட்படுத்தல் கொள்கையில் அத்தியாவசியத் தூண் ஒன்றாக நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு தோற்றம்பெற்றுள்ளது. *இலங்கையின் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயமும்* இவ் யதார்த்தத்தினை உறுதியாக அங்கீகரிக்கின்றது.

இப்பின்னணிக்கெதிராக, இலங்கை மத்திய வங்கி **“மோசடியிலிருந்து தவிர்ந்திருப்போம்”** என்ற கருப்பொருளின் கீழ் நிதியியல் மோசடிகள் மீது ஒரு மாத நீண்ட தேசிய விழிப்புணர்வுப் பிரசாரத்தினை தொடங்குகின்றது.

## ஒருங்கிணைக்கப்பட்ட தேசிய பாதுகாப்பு: பங்குதாரர் வகிபாகங்களும் பகிரப்பட்ட கடப்பாடுகளும்

எவ்வாறாயினும், இதனை இலங்கை மத்திய வங்கி மாத்திரம் தனித்துச் செய்துவிடமுடியாது. இவ்விழிப்புணர்வு பிரசாரமானது, பல்வேறு நிறுவனங்கள் மற்றும் தகவல் தொடர்பு ஊடகங்கள் வாயிலாக ஒருங்கிணைக்கப்பட்ட முறையில் விழிப்புணர்வுச் செய்திகளை மக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது

இன்று இங்கிருக்கும் **ஊடகங்கள்:** நீங்களே எமது மிகவும் சக்திவாய்ந்த பரப்புநர்கள் மத்தியில் இடம்பெறுகின்றீர்கள். உங்களது வகிபாகம் நிகழ்வுகள் பற்றி அப்படியே அறிக்கையிடுவதுடன் நின்றுவிடாது நிதியியல் மோசடிகளை முறியடிப்பதற்கான முயற்சிகளுக்கு தீவிரமாக ஆதரவளிக்கும் வகையில் அது மாற்றம்பெற வேண்டும். நீங்கள் கூறும் கதைகளும் நீங்கள் கொண்டுசெல்லும் செய்திகளும் வாழ்வாதாரங்களைப் பாதுகாப்பதற்கும் நாடு முழுவதுமுள்ள சமூகங்களிடையே தாக்குப்பிடிக்கும் தன்மையை கட்டியெழுப்புவதற்கும் துணையளிக்கும்.

**நிதியியல் நிறுவனங்களும் நிதியியல் தொழில்நுட்பம் வழங்குநர்களும்** முதனிலைப் பாதுகாப்பை அமைக்கின்றன. வாடிக்கையாளர்கள் உங்கள் மீது வைத்துள்ள நம்பிக்கையானது அவர்களுக்கு சேவையாற்றுவது மாத்திரமன்றி அவர்களை பாதுகாத்து அரவணைக்க வேண்டிய தெளிவான பொறுப்பையும் கடப்பாட்டையும் உங்களுக்கு வழங்குகின்றது.

**தொலைத்தொடர்பூட்டல் வழங்குநர்கள்** எமது மக்களை இணைக்கின்ற வலையமைப்புக்களை தொழிற்படுத்துகின்றனர் என்பதுடன் இதே வலையமைப்புகளே அவர்களை இலக்கு வைப்பதற்கு இடையறாது தவறாகப் பயன்படுத்தப்படுகின்றன. அனைத்து தொடர்புடைய ஆர்வலர்கள் மத்தியிலும் தொடர்ச்சியான விழிப்பிற்கும் ஒருங்கிணைக்கப்பட்ட நடவடிக்கைக்குமான தேவையினை இது அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது.

**இணையப்பாதுகாப்பு அதிகாரிகளும் சட்ட அமுலாக்க முகவராண்மைகளும்** நிதியியல் அமைப்பை பாதுகாப்பதில் இன்றியமையாத பங்காற்றுகின்றனர். உங்களுடன் ஒருங்கிணைந்து செயற்படுவதற்கு இலங்கை மத்திய வங்கி தயாராகவுள்ளதுடன் எமது ஒருங்கிணைப்பு தொடர்ந்தும் வலிமைபெறுமென நான் நம்புகின்றேன்.

**ஊக்குவிப்பவர்களையும் உள்ளடக்க விருத்தியாளர்களையும்** உங்களது சென்றடைவை பொறுப்புணர்வுடன் பயன்படுத்தி இப்பிரசாரத்தில் எம்முடன் இணையுமாறு ஊக்குவிக்கின்றோம். பொறுப்புணர்வில்லாத சென்றடைவு உங்களை நம்பும் ஒவ்வொருவரையும் ஆபத்தில் தள்ளிவிடும். அந்நம்பிக்கையைப் பாதுகாப்பதற்கு உங்களது தொடர்ச்சியான கடமைப்பொறுப்பையும் இலங்கை மத்திய வங்கியுடனான ஈடுபாட்டையும் நாம் எதிர்பார்க்கின்றோம்.

அதேபோன்று **நிதியியல் பகுப்பாய்வாளர்களே,** உங்களது மதிப்பீடுகள் எண்ணப்பாங்கு மற்றும் கொள்கை இரண்டையும் நெறிப்படுத்துகின்றன. உண்மையில் பயனளிக்கக்கூடிய தீர்வுகளை கொண்டுவரவேண்டிய கட்டாயத்திலிருக்கும் சமூகங்களின் வாழ்வியல் யதார்த்தங்கள் உள்ளடங்கலாக ஒட்டுமொத்த சூழலையும் அடிப்படையாகக் கொண்டு உங்களது பணிகளை அமைத்துக்கொள்வது தற்போதைய காலத்தில் கட்டாயமானதாகும்.

சீமாட்டிகளே, கனவான்களே, இம்முன்முயற்சி இலங்கை மத்திய வங்கி தனியே முன்னேற்றக்கூடிய ஒன்றல்ல. எவ்வாறாயினும், நிதியியல் முறைமை, தொழில்நுட்பவியல் சூழலமைப்பு, ஊடக தோற்ற அமைப்பு மற்றும் சட்ட அமுலாக்கம் என்பன ஒன்றாக இணையும் போது இத்தருணம் வேண்டிநிற்கின்ற ஒருங்கிணைக்கப்பட்ட, தாக்குப்பிடிக்கத்தக்க பாதுகாப்பு அரணை எம்மால் கட்டியெழுப்ப முடியும்.

## தேசியளவிலான சென்றடைவும் பிரசைகளின் பொறுப்பும்

இம்முக்கிய செய்திகளை நாடு முழுவதும் குறிப்பாக கிராமிய சமூகங்கள், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள், சிரேஷ்ட பிரசைகள், இளம் சமுதாயம், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், பணியாற்றும் இடங்கள், வீடுகள் உள்ளடங்கலாக அநேகமாகப் பாதிக்கப்படத்தக்க வகுப்பினர்களுக்கு கொண்டு செல்வதில் உங்களது ஆதரவினை நாடுகின்றோம். இந்நோக்கத்திற்காக, சுவரொட்டிகள் தொடக்கம் குறுந்திரைப்படம், பல ஊடக ஈடுபாடுகள், மரபுசார்ந்த மற்றும் டிஜிட்டல் ஊடகத் தளங்கள் என்பவற்றுடன் இணைந்த கருப்பொருள் பாடல் என்பவற்றை உள்ளடக்கிய பல் ஊடகப் பிரசாரமொன்றை நாம் வடிவமைத்துள்ளோம். ஏனெனில், இன்றைய சூழலில் மக்களின் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு வெறும் தகவல்கள் மாத்திரமின்றி அவர்களுடன் நெருங்கிய பிணைப்பும் அவசியம் என்பதை நாம் நன்கு அறிவோம்.

இப்பிரசாரத்தின் ஊடாக அவர்களது சொந்த நிதியியல் நல்வாழ்வைப் பாதுகாத்துக்கொள்வதில் பிரசைகளின் வகிபாகத்தினையும் வலியுறுத்துவதற்கும் நாம் நாடுகின்றோம். அனைத்துக்கும் மேலாக ஒவ்வொரு தனிப்பட்டவரும் தம்மை மாத்திரமின்றி பரந்த நிதியியல் முறைமையின்

நேர்மையினையும் தாக்குப்பிடிக்கும் தன்மையினையும் பாதுகாப்பதில் முக்கிய பங்காற்றவேண்டியுள்ளது.

சந்தேகத்திற்கிடமான வாக்குறுதி பற்றி வினவுங்கள், நம்புவதற்கு முன்னர் உறுதிப்படுத்துங்கள், பொறுப்புடன் செயற்படுங்கள். தனிப்பட்டவரின் பாதுகாப்பையும் ஒட்டுமொத்த நிதியியல் முறைமை மீதான பொதுமக்களின் நம்பிக்கையையும் வலுப்படுத்துவதற்கு இது மிகவும் இன்றியமையாததாகும்.

## முன்நோக்கிய பாதை: உறுதியான கடமைப்பொறுப்பும் கூட்டான நடவடிக்கையும்

சீமாட்டிகளே, கனவான்களே, உதவி ஆளுநர் அவரது வரவேற்புரையில் எடுத்துக்காட்டியவாறு, அண்மைக்காலங்களில் இலங்கை மத்திய வங்கி பல விழிப்புணர்வு முன்முயற்சிகளை மேற்கொண்டிருந்ததுடன் இவை வலுவான பொதுமக்கள் ஈடுபாட்டை உருவாக்கியது மாத்திரமன்றி நிதியியல் பாதுகாப்பு மற்றும் மோசடித் தடுப்பு பற்றிய முக்கிய தேசியளவிலான கலந்துரையாடல்களுக்கும் வழியமைத்துள்ளது.

இத்தகைய கலந்துரையாடல்கள் ஒரு வாரத்திலோ, ஒரு மாதத்திலோ நின்றுவிடாமல் தொடர்ந்தும் முன்னெடுத்துச்செல்லப்படுவதே மிக முக்கியமானதாகும். தோற்றம்பெறுகின்ற அச்சுறுத்தல்கள், புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் மாற்றமடைந்துவருகின்ற வாடிக்கையாளர் நடத்தை என்பவற்றுடன் பொருந்தும் விதத்தில் இக்கலந்துரையாடல்கள் பரிணாம வளர்ச்சியடையவும் வேண்டும்.

இம்முன்முயற்சிகளுக்கு இலங்கை மத்திய வங்கி தொடர்ந்தும் தலைமைதாங்குகின்ற அதேவேளை அவை எமது பொருளாதாரம் மற்றும் எமது மக்களிடையே தொலைதூர மூலைமுடுக்கெல்லாம் சென்றடைவதை உறுதிசெய்வதற்கு உங்களைப் போன்ற பங்குதாரர்களுடன் இணைந்து செயற்படுவதற்கும் நாம் நாடுகின்றோம்.

***சீமாட்டிகளே, கனவான்களே, நாம் ஒன்றாக இணைந்து உண்மையாக "மோசடிகளிலிருந்து தவிர்ந்திருங்கள்" உடன் கூடிய இலங்கையை கட்டியெழுப்புவோம்.***

நன்றி